**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI**
**SESSIONS CASE No.514/2019**
**Prosecution Witness P.W. 9**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ராஜசேகர் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - **03.12.2024.**

**(எதிரி ஆஜர்)**

<u>முதல்விசாரணை-</u>

எனது உண்மையான பெயர் ராஜசேகர், ஆனால் என்னை அழைப்பது சேகர். நான் தற்போது மதுரை மாட்டுத்தாவணி ஆம்னி பேருந்து நிலையத்தில் ஆர்.பி.டிராவல்ஸ் என்ற பெயரில் டிராவல்ஸ் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், அவர் என்னிடத்தில் சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பாக டிக்கெட் ஏஜெண்டாக பணியாற்றி வந்தார். தற்போது என்னிடத்தில் பணியாற்றவில்லை. வழக்கு விசயமாக எனக்கு எதுவும் ஞாபகமில்லை. இதுசம்பந்தமாக என்னை போலிசார் விசாரிக்கவில்லை. **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு விசயமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 07.04.2019 அன்று என்னிடத்தில் பணியாற்றிய அருண்குமார் என்பவர் மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் யாரோ ஒருவருடன் சண்டை போட்டார் என்றும், மேற்படி அருண்குமார் அடித்ததில், அந்த நபர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும், பின்னர் நடந்த சம்பவம் குறித்து தெரிந்து கொண்டேன் என்றும், இறந்த நபருடைய பெயர் கோவிந்தராஜ் என்று

தெரிந்து கொண்டேன் என்றும், காவல் ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது ஆஜர் எதிரி சிறிது நாட்கள் என்னிடத்தில் வேலை பார்த்தார் என்பதற்காக, அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் மூலம்)**

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்
கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxx
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.